**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**
**KILVELUR**
**STC 67/2026**
LW 4 PW 3

| | | | |
|---|---|---|---|
| Name | ராதாகிருஷ்ணன் | Caste | |
| Father's/Husband Name | ராமகிருஷ்ணன் | Calling | உதவி ஆய்வாளர்<br>CSE, Nagapattinam |
| Village | | Religion | |
| Taluk | | Age | 60/2026 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **18th day of May 2026**

Signature of witness.

**எதிரி காணொளி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார்.**
**முதல் விசாரணை**

நான் CSE, Nagapattinam காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். காணொளியில் ஆஜரான எதிரியை எனக்கு தெரியும். 17.02.2026 நான் வேளாங்கண்ணி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது நிலைய குற்ற எண். 82/2025 சட்டப்பிரிவுகள் 269 பி என்எஸ் ன் படி வழக்கின் சம்பந்தப்பட்ட எதிரி கிரேட்டன் (எ) ரோசரி கிரேட்டன் த/பெ. கணேசன் ஆரியநாட்டுத் தெரு, வேளாங்கண்ணி என்பவரை வழக்கின் மேல் நடவடிக்கைக்காக நிலைய குற்ற எண் 38/26 சட்டப்பிரிவு 123 பிஎன்எஸ் 8 (c) r/w 20(b), (ii) (B) 25 NDPS Act என்ற வழக்கில் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற அடைப்பு காவலில் திருச்சி மத்திய சிறையில் இருந்தவரை வழக்கில் சம்பிராதய கைது செய்ய வேளாங்கண்ணி உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள் அனுமதியுடன் வேளாங்கண்ணி காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் உத்தரவுப்படி திருச்சி மத்திய சிறைக்கு சென்று 17.02.2026 அன்று 15.40 மணிக்கு சிறை அலுவலர் முன்பாக சம்பிராதய

கைது செய்து எதிரியை நீதி மன்ற காவலுக்கு உட்படுத்த காவல் ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படாததால் அ.சா.3ன் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/-ர.மீனாட்சி எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கீழ்வேளூர்.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**
**KILVELUR**
**STC 67/2026**
LW 3 PW 2

| | | | |
|---|---|---|---|
| Name | ரமேஷ் | Caste | |
| Father's/Husband Name | ராமையன் | Calling | தலைமை காவலர், வேளாங்கண்ணிகாவல் நிலையம் |
| Village | | Religion | |
| Taluk | | Age | 46/2026 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **18th day of May 2026**

Signature of witness.

**எதிரி காணொளி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார்.**
**முதல் விசாரணை**

**1.** நான் வேளாங்கண்ணி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். காணொளியில் ஆஜரான எதிரியை எனக்கு தெரியும். நானும் சிறப்பு உதவி ஆய்வாளர் லோகநாதன் வேளாங்கண்ணி காவல் நியைலத்தில் 19.02.2025 அன்று பணியில் இருந்த போது வேளாங்கண்ணி காவல் நிலைய குற்றஎண். 288/2022 சட்டப்பிரிவுகள் 147, 148, 149, 449, 120(b), 109, 201, 307, 302 இதச பிரிவுகளின் படி கிரேட்டன் (எ) ரோசரி கிரேட்டன் ( எதிரி 2 ) த/பெ. கணேசன் ஆரிய நாட்டுத் தெற்கு தெரு, வேளாங்கண்ணி வழக்கு சம்பந்தமாக நாகப்பட்டினம் அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்து, நிபந்தனையின் பேரில் முன் ஜாமீன் பெற்று, நாகப்பட்டினம் அமர்வு நீதிமன்றத்தில் ஆஜர் ஆகாமால் இருந்து வருகிறார்.

2. நாகப்பட்டினம் அமர்வு நீதிபதி அவர்கள் 18.02.2025ம் தேதி பிடியாணை பிறப்பித்து உத்தரவிட்டார். அதனை நீதிமன்ற பெண் காவலர் சங்கீதா அவர்கள் பெற்றுக் கொண்டு பிடியாணை சம்பந்தமாக எதிரி 2

ஆஜராகமால் கால தாமதமாகவும் வழக்கை மேல் நடத்த முடியாமலும் இருப்பதாலும் பெண் காவலர் சங்கீதா நிலையம் வந்து 19.02.2025 அன்று வெளிப்பாளைய காவல் நிலைய பொறுப்பு ஆய்வாளர் அவர்களிடம் ஒரு தனி அறிக்கையை கொடுத்தார்.

3. அந்த தனி அறிக்கை சம்பந்தமாக 20.2.2025 மாலை 18.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கை ஆய்வாளர் அவர்கள் குற்ற எண் 82/2025 ன்படி சட்டப்பிரிவுகள் 269 பி என்எஸ் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரித்தார். நடந்த விபரத்தை சொன்னேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படாததால் அ.சா.2ன் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கைெயழுத்து செய்தார்.

ஒம்/-ர.மீனாட்சி எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கீழ்வேளூர்.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**
**KILVELUR**
**STC 67/2026**
LW 1 PW 1

| Name | சங்கீதா | Caste | |
|---|---|---|---|
| Father's/Husband Name | மணிகண்டன் | Calling | பெண் காவலர் வேளாங்கண்ணி காவல் நிலையம் |
| Village | | Religion | |
| Taluk | | Age | 34/2026 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **18th day of May 2026**

Signature of witness.

**எதிரி காணொளி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார்.**
**முதல் விசாரணை**

**1.**நான் வேளாங்கண்ணி காவல் நிலையத்தில் பெண் காவலராக பணிபுரிந்து வருகிறேன். காணொளியில் ஆஜரான எதிரியை எனக்கு தெரியும். நான் நாகப்பட்டினம் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் நீதிமன்ற காவலராக பணிபுரிந்து வருகிறேன். வேளாங்கண்ணி காவல் நிலைய குற்றஎண். 288/2022 சட்டப்பிரிவுகள் 147, 148, 149, 449, 120(b), 109, 201, 307, 302 இதச பிரிவுகளின் படி கிரேட்டன் (எ) ரோசரி கிரேட்டன் ( எதிரி 2 ) த/பெ. கணேசன் ஆரிய நாட்டுத் தெரு, வேளாங்கண்ணி என்பவர் நிபந்தனை ஜாமீன் பெற்றுள்ளார். இந்நிலையில் எதிரிA2 நாகப்பட்டினம் அமர்வு நீதிமன்றத்தில் எஸ் சி நெ. 6/23 ன் படி வழக்கு நிலுவையில் உள்ளது.

2.எதிரியானவர் A2 18.02.2025 அன்று நாகப்பட்டினம் அமர்வு நீதிமன்றத்தில் ஆஜர் ஆகாததால் கனம் மாவட்ட அமர்வு நீதிபதி அய்யா அவர்கள் ஜாமீனில் வெளி வர முடியாத பிடிக்கட்டளை எதிரிக்கு

போடப்பட்டது. எதிரியானவர் வழக்கிற்கு சாட்சிகள் ஏற்ற முடியாத அளவிற்கும் நீதிமன்றத்திற்கு ஆஜராகமாலும் வழக்கு எந்த முன்னேற்றம் இல்லாமலும் வழக்கை தொடர்ந்து நடத்தாமல் இருக்க வேண்டுமென்றே இருந்தார். வழக்கு எந்த நிலைக்கும் கொண்டு செல்லாமல் இருக்க ஏற்படுத்தியுள்ளளார். இந்நிலையில் 19.02.2025 அன்று மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் பெஞ்ச் கிளர்க்கிடம் வாரண்டை வாங்கி கொண்டு வேளாங்கண்ணி காவல் நிலையம் சென்று காவல் ஆய்வாளரிடம் தனி அறிக்கையும் என்பிஜ வாரண்டையும் பெற்று வேளாங்கண்ணணி காவல் ஆய்வாளரிடம் கொடுத்தேன்.

3. எதிரியானவர் நீதிமன்றத்திற்கு வராமலும் சாட்சிகளை விசாரிக்க விடாமலும் குறுக்கு விசாரணை செய்யாமலும் காவல் ஆய்வாளரிடம் புகாராக கொடுத்தேன். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் தனி அறிக்கை நான் அளித்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **நான் அளித்த புகார் அ.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காவல் ஆய்வாளர் என்னிடம் பிடிக்கட்டளை மற்றும் தனி அறிக்கை வாங்கி கொண்டு 82/2025 சட்டப்பிரிவுகள் 269 பிஎன்எஸ் படி 20.02.25 அன்று 18.00 மணிக்கு காவல் ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். நீதிமன்றத்தில் நடந்த விபரத்தை காவல் ஆய்வாளரிடம் கூறினேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படாததால் அ.சா. 1 ன் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/–ர.மீனாட்சி எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கீழ்வேளூர்.